**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | STC No. 1626/2023 |
| Deposition of witness for Prosecution | : | P.W–1 |
| Name | : | கல்யாணகுமார், வயது 51 |
| Father Name/Husband Name | : | திருமால் |
| Village | : | சிதம்பரம்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | கிராம நிர்வாக அலுவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21st day of December 2023.

**(4 வது எதிரி ஆஜர் 1 முதல் 3 மற்றும் 5 முதல் 11 வரையிலான எதிரிகள் ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கே.சுப்பிரமணியாபுரத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் உள்ளேன். ஆஜர் 4 வது எதிரியை தெரியும். மற்ற எதிரிகளை தெரியும் அவர்கள் தற்போது நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை பார்த்தால் அடையாளம் தெரியும். கே.சுப்பிரமணியாபுரம் கிராமத்தில் ஜம்புலிங்கபுரம் பஞ்சாயத்திற்கு உட்பட்ட ஜம்புலிங்கபுரம் கிராமத்தில் இருந்து கிழக்காக செல்லும் புல எண்.163, 165 ஒட்டிச் செல்லும் பாதையில் ஆக்கிரமிப்பு உள்ளதாக ஒரு வருடத்திற்கு முன்பு மனு கொடுத்திருந்தார்கள்.
2. அதனை அகற்றுவதற்காக 13.10.2021 ஆம் தேதி மதியம், நேரம் சரியாக ஞாபகம் இல்லை. நான், துணை வட்டாட்சியர் திரவியம், வருவாய் ஆய்வாளர் பாலமுருகன், பிர்கா சர்வேயர் செல்வமாடசாமி சென்றோம். அப்போது அதனை அகற்றவிடாமல் அந்த கிராமத்தை சேர்ந்த பழனிச்சாமி மற்றும் 10 பேர் சேர்ந்து தடுத்தார்கள். அதனால் எங்கள் பணியை செய்ய முடியவில்லை. அதன் பின்னர் நாங்கள் காவல்நிலையம் வந்து புகார் கொடுத்தேன்.
3. என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். ( **அந்த புகார்மனு அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

எதிரிகள் பாதையை ஆக்கிரமிப்பு செய்ததாக யார் உங்களிடம் புகார்

கொடுத்தார்கள் என்றால் வேலுச்சாமி வகையறா பாதையை ஆக்கிரமிப்பு செய்ததாக எதிரிகள் தரப்பினர்கள் புகார் கொடுத்தார்கள். அந்த புகார் கொடுத்த சமயம் நீங்கள் அந்த கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இல்லை என்றால் சரிதான்.

நீங்கள் காவல்நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் விசாரணை நடைபெற்று அன்றைய தினமே உங்களுக்கு புகார்மனு ரசீது கொடுக்கப்பட்டது என்றால் அன்றைய தினம் கொடுக்கப்படவில்லை சிறிது நாட்கள் கழித்து விசாரித்து மனுவை முடித்து ரசீது கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

நீங்கள் புகார் கொடுத்த போது சம்பவ இடத்தில் இருந்த நபர்களின் பெயர் விவரங்கள் சரியாக தெரியாது என்று தான் புகார் கொடுத்தீர்கள் என்றால் இல்லை சரியாக தான் கொடுத்தேன். கிழமேல் பொதுபாதையை ஆக்கிரமிப்பு செய்ததாக நீங்கள் புகாரில் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான்.

நீங்கள் புகார் கொடுக்கும் போது வேலுச்சாமி வகையறா மீது எதிரிகள் வகையறா கொடுத்த புகார் மனுவை இணைத்து கொடுத்தீர்களா என்றால் இல்லை. எதிரிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக சொல்லக்கூடிய இட்ம் அரசுக்கு சொந்தமானது என்பதை காட்டக்கூடிய ஆவணங்களை போலிசாரிடம் கொடுத்தீர்களா என்றால் கொடுத்ததாக ஞாபகம் இல்லை.

எதிரிகளுக்கு இரண்டு முறை அறிவிப்பு அனுப்பியதாக சொல்லியுள்ள நிலையில் அதன் நகலை புகார் கொடுக்கும் போது கொடுத்தீர்களா என்றால் இல்லை. பொதுவாக ஒரு வழக்கு சம்பந்தமாக புகார் கொடுக்கும் முன்னர் உங்கள் மேல் அதிகாரியிடம் தெரிவித்து அவர்கள் பரிந்துரையின் பேரில் தான் புகார் கொடுக்கப்பட வேண்டும் என்றால் சரிதான்.

இந்த வழக்கு சம்பந்தமாக நீங்கள் கொடுத்த புகாருக்கு உங்கள் மேல் அதிகாரி உங்களுக்கு எழுத்து பூர்வமாக உத்தரவோ அல்லது பரிந்துரையோ கொடுத்தார்களா என்றால் இல்லை வாய்மொழியாக சொன்னார்கள். பொதுவாக நீங்கள் ஒரு பணிக்கு செல்வதாக இருந்தால் அந்த விவரம் உங்கள் பணிபதிவேட்டில் இருக்கும் என்றால் எங்களுக்கு பணிபதிவேடுகள் இல்லை.

1910 ஆம் ஆண்டு முதல் எதிரிகள் தான் சம்பந்தப்பட்ட இடத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்பதற்கான ஆவணத்தை பார்வையிட்டீர்களா என்றால் UDR க்கு பிந்தைய ஆவணங்களை பார்வையிட்டேன் எதிரிகள் பெயரில் தான் உள்ளது. உங்களுக்கு முன்னர் இருந்த வி.ஏ.ஓ சுப்பையா எதிரிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

எதிரிகள் இடத்தை ஆக்கிரமிப்பு செய்த குறிப்புகள் உள்ள ஆவணங்களை பார்வையிட்டீர்களா என்றால் பார்வையிடவில்லை. எதிரிகளாக சேர்த்துள்ள 11 பேர் இடமும் சம்பவ இடத்தில் தொடர்ச்சியாக உள்ளது என்றால் சரிதான். நீங்கள் இடத்தை அளக்க போகும் போது அங்கு எதிரிகளை தவிர வேடிக்கை பார்த்த நபர்கள் நிறைய பேர் இருந்தார்கள் என்றால் சரிதான்.

நீங்கள் கொடுத்த புகாரில், எதிரிகளின் செயல்களால் உங்கள் பணி தடைபட்டு

பாதியில் திரும்பிவிட்டதாக சொல்லியுள்ளீர்களா என்றால் அப்படி சொல்லவில்லை பணி செய்யவிடாமல் தடுத்ததாக சொல்லியுள்ளேன். எதிரிகள் யாரும் உங்களை தாக்கவோ தாக்க முயற்சி செய்யவோ இல்லை என்றால் சரிதான்.

நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் நீங்கள் வழக்கு சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றாலும் சம்பவ இடம் சென்று இடத்தை அளந்ததாக சொல்வது உண்மை அல்ல என்றாலும் அதனால் தான் நீங்கள் கொடுத்த புகார் மனு முதலில் விசாரணையில் முடிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால்ச ரியல்ல. எதிரிகள் தாசில்தார், கலெக்டர் மீது நிறைய புகார் கொடுத்திருந்ததால் எதிரிகள் மீது வேண்டும் என்றே வழக்கு பதிவு செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.